# மாணவ அச்சுறுத்தல் கணிப்பீடு மற்றும் இடையீடு: நியாயமான அறிவிப்பு மற்றும் செயல்முறை

## மாணவ அச்சுறுத்தல் கணிப்பீடு மற்றும் இடையீடு செயற்பாடுகளின் நோக்கம் என்ன?

Student Threat Assessment and Intervention (மாணவ அச்சுறுத்தல் கணிப்பீடு மற்றும் இடையீடு) செயற்பாடுகள் கீழ்வருவனவற்றை பூர்த்திசெய்யும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டவை:

- மாணவர்கள், அலுவலர்கள், பெற்றோர், மற்றும் பாடசாலை சமூகத்தின் ஏனைய அங்கத்தவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்தல்;
- வன்முறையிற்கான அச்சுறுத்தல் ஒன்று ஏற்படும்பொழுது அதற்கு செயற்திறனானதும் நேரத்திற்குரியதுமான பதிலளிப்பு வழங்கப்படுவதை உறுதிசெய்தல்;
- ஒரு நபர், ஏனையவருக்கு தீங்கு விளைவிப்பதாக அச்சுறுத்தல்களை செய்யுமொரு சூழ்நிலை ஏற்படுவதற்கான காரணிகளை புரிந்துகொள்வதற்கு ஆரம்பித்தல்;
- ஒரு இடையீடு திட்டத்தை விருத்திசெய்வதற்கு உதவிபுரிதல்;
- சம்பந்தப்பட்ட அனைவரினதும் உணர்வுசார், உடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துதல்.

## Threat (அச்சுறுத்தல்) என்பது என்ன?

ஒரு நபர் அல்லது பொருளிற்கு தீங்கு விளைவிப்பதற்கு அல்லது அவற்றிற்கு எதிராக முரட்டுத்தனமாக செயற்படுவதற்கு நோக்கம் தெரிவிக்கும் ஒரு அறிகுறியே அச்சுறுத்தல் என்று அழைக்கப்படுகின்றது. வார்த்தைரீதியாக, எழுத்துவடிவில், வரையப்பட்டு, இணையத்தில் காண்பிக்கப்பட்டு, சைகைகளினால் தெரிவிக்கப்பட்டு, அல்லது சம்பவங்களைச் சார்ந்த சூழ்நிலைகளிலிருந்து நியாயமாக ஊகிக்கப்படக்கூடிய வடிவத்தில் அச்சுறுத்தல்கள் அமையக்கூடியவையாகும். அச்சுறுத்தல்கள் முக்கியமானவையாகக் கருதப்படவேண்டியதுடன், அவை ஆராயப்பட்டு, அவற்றிற்கு நேரத்திற்குரிய முறையில் பதிலளிப்பு வழங்கப்படுதல் அவசியம்.

## வன்முறையிற்கான அச்சுறுத்தல் ஒன்று அறிவிக்கப்படும் பொழுது என்ன நடக்கும்?

ஒரு மாணவரால் செய்யப்படும் எல்லா அச்சுறுத்தற் செய்யும் நடத்தைகளும் தலைமையாசிரியருக்கு அறிவிக்கப்படும்; அவர் Student Threat Assessment and Intervention (மாணவ அச்சுறுத்தல் கணிப்பீடு மற்றும் இடையீடு) செயல்முறையை இயக்கிவைப்பார். ஒரு பாடசாலை நிர்வாகியிடம் குறித்த அச்சுறுத்தலைப் பற்றி அறிவிக்கப்பட்ட பின்னர், நேர்காணல்கள் நடத்திவைக்கப்படும். மாணவர்கள், அலுவலர்கள், குடும்ப அங்கத்தவர்கள், மற்றும்/அல்லது தகுந்தவாறு வேறு நபர்களுடன் இந்த நேர்காணல்கள் இடம்பெறும். அபாயத்திற்கான தரத்தை அறிந்துகொள்ளவும், அச்சம்பவத்திற்கான செயற்திறனான மற்றும் நேரத்திற்குரியதுமான பதிலளிப்பை விருத்திசெய்வதற்கும் இது மேற்கொள்ளப்படும். உடனடியான பாதுகாப்பு அபாயம் கணிக்கப்பட்ட பின்னர், பெற்றோர்/பாதுகாவலரின் அபிப்பிராயங்களுடன், ஆதரவு மற்றும் இடையீடு திட்டங்கள் நிறுவப்படும்.

## பெற்றோர்/மாணவ இணக்கம் அவசியப்படுகின்றதா?

ஒரு அவசரநிலை சம்பவத்திற்கு பதிலளிப்பதற்கு இணக்கம் அவசியமற்றது. யாதேனுமொருவருக்கு தீங்கு ஏற்படக்கூடும் என்ற அபாயம் காணப்படும் வேளையில், அவசியத்திற்கேற்ப, சம்பந்தப்பட்ட எல்லா தரப்புகளுடனும், அந்நிகழ்விற்கு இயலுமானளவு விரைவாகவும் செயற்திறனாகவும் பதிலளிப்பதே முக்கியமானதாகும்.

## நியாயமான அறிவிப்பு

ஏனையவரிற்கு தீங்கு விளைவிப்பதற்கான ஓர் அச்சுறுத்தல் (வார்த்தைரீதியான, எழுத்துவடிவிலான, அல்லது சைகையாலான) சம்பந்தப்பட்ட ஏதேனுமோர் அறிவிப்பு, ஆராய்விற்கு உற்படுத்தப்படும் என்று பாடசாலை சமூகத்தின் எல்லா அங்கத்தவர்களுக்கும் இந்தத் துண்டுப்பிரசுரம் "நியாயமான அறிவிப்பு" ஆக அமைகின்றது என்பதைத் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

## மாணவ அச்சுறுத்தல் கணிப்பீடு மற்றும் இடையீடு குழுவின் அங்கத்தவர் யார்?

ஒவ்வொரு பாடசாலையும் Student Threat Assessment and Intervention (மாணவ அச்சுறுத்தல் கணிப்பீடு மற்றும் இடையீடு) செயற்பாட்டைக் குறித்து பயிற்சிபெற்ற அலுவலர்களை கொண்டிருக்கும். ஒரு பல்-துறை Student Threat Assessment and Intervention (மாணவ அச்சுறுத்தல் கணிப்பீடு மற்றும் இடையீடு) குழுவானது, அபாயக் கணிப்பீட்டை மேற்கொண்டு, செயற்திறனான மற்றும் நேரத்திற்குரியதுமான இடையீடு திட்டமொன்றை விருத்திசெய்யும். ஒரு School Administrator (பாடசாலை நிர்வாகி), School Social Worker (பாடசாலை சமூகச் சேவையாளர்) மற்றும்/அல்லது Psychological Services (மனோதத்துவ சேவைகள்) அலுவலக உறுப்பினர், York Regional Police (யோர்க் பிராந்திய காவற்துறை) உத்தியோகஸ்தர் மற்றும்/அல்லது மாணவரை நன்கறிந்த பாடசாலை அலுவலர்கள் ஆகியோர் இக்குழுவில் உள்ளடங்கியுள்ளனர்.

## கேள்விகள்?

உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் காணப்பட்டால், தயவுசெய்து உங்கள் பாடசாலை நிர்வாகியுடன் தொடர்புகொள்ளுங்கள்.

# அச்சுறுத்தல் கணிப்பீடு மற்றும் இடையீடு

பாடசாலை சமூகத்தின் உறுப்பினரது நலனும் பாதுகாப்பும் பகிரப்படவேண்டிய ஒரு பொறுப்பாகும். பாதுகாப்பான சுற்றாடல்களை பேணுதல், இடையூறுகளை அறிந்திருத்தல், மற்றும் அவசரநிலைகளுக்கு செயற்திறனாகத் திட்டமிடுதல் ஆகியன, நம் அனைவருக்கும் முக்கியமானதாகும். வன்முறையிற்கான இடர்வரவைத் தவிர்ப்பதும் அதற்கு பதிலளிப்பதும் இதனுள் அடங்குகின்றது.

பாடசாலைகளே எமது சமூகத்திலுள்ள மிகவும் பாதுகாப்பான சில அமைவிடங்களாக அமைகின்றன. மாணவரது பாதுகாப்பையும் நலனையும் தொடர்ந்து மேம்படுத்துவதற்கு, வன்முறை அச்சுறுத்தல்களுக்கு பதிலளிப்பதற்கென எங்கள் சமூக பங்குதாரர்களுடன் ஒன்றுசேர்ந்து நாம் Student Threat Assessment and Intervention (மாணவ அச்சுறுத்தல் கணிப்பீடு மற்றும் இடையீடு) செயற்பாடுகளை விருத்திசெய்துள்ளோம்.

ஒரு மாணவர் மற்றவருக்கு தீங்கு "விளைவிக்கக்கூடிய இடர்வரவு" உடையவர் என்பதை குறிப்பால் உணர்த்தும் நடத்தைகளுக்கு, உதாரணமாக செயல்கள், கூற்றுகள், மற்றும் வேறு குறிகாட்டிகள் ஆகியவை உள்ளடங்கியவற்றிற்கு, எங்கள் ***Student Threat Assessment and Intervention Protocol (மாணவ அச்சுறுத்தல் கணிப்பீடு மற்றும் இடையீடு வரைமுறை)*** பதிலளிப்பதற்கென விருத்திசெய்யப்பட்டுள்ளது. பாடசாலை சமூகங்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும் அனைவருக்கும் ஆதரவளிப்பதற்கும், அலுவலர்கள், பெற்றோர், மாணவர்கள், மற்றும் சமூக அங்கத்தவர்கள் ***கட்டாயமாக*** எல்லா அச்சுறுத்தல்-சம்பந்தமான நடத்தைகளையும் பாடசாலை நிர்வாகி அல்லது காவற்துறைக்கு இயலுமானளவு விரைவாக அறிவித்தல் அவசியமாகும்.

குறிப்பு – பாடசாலை சமூகத்திலுள்ள வயதுவந்தவர்களினால் ஏற்படும் அச்சுறுத்தல்களைக் கையாள்வதற்கு வேறு செயற்பாடுகளும் வரைமுறைகளும் நிறுவப்பட்டுள்ளன.


**YORK REGION DISTRICT SCHOOL BOARD**

60 Wellington Street West
Box 40
Aurora, Ontario
L4G 3H2

தொலைபேசி: 905-727-3141
416-969-8131
தொலைநகல்: 905-727-1931


# மாணவ அச்சுறுத்தல் கணிப்பீடு மற்றும் இடையீடு

*எங்கள் மாணவர்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் !*

**YORK REGION DISTRICT SCHOOL BOARD**

York Region District School Board

Tamil